# அரசியல் வானில் அழகிய முழு நிலா



கவிச்சுடர் அன்பு முகைதீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்,

காலத்தின் நுட்பம் அறிந்து
சமூகத்தின் விடிவுக்காக
உழைத்துவரும்
சகோதரர் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்களின்
சேவைக்கு,
இம்மையிலும் மறுமையிலும்
சாட்சிசொல்ல விரும்பும்
இனிய இதயங்களுக்கு
சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

அரசியல் வானில் அவர் ஓர் அழகிய முழு நிலா.
அவர் செய்தது சாதனை மட்டுமல்ல சாணக்கியம்.
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி என்ற
ஆலவிருட்சத்தின் ஆணிவேர்.
முஸ்லிம் சமூகத்தின் தனித்துவ அடையாளத்தை
ஏனைய சமூகத்தினருக்கு
எழுத்திலும் பேச்சிலும் எடுத்துக்காட்டியவர்.
தென்கிழக்கு மாகாணத் திசையைத்
தெரியப்படுத்திய திறமைசாலி.
எங்கள் தலைவன்.
அமைச்சர் பதவியை அலங்கரித்த போதும்
"உறவுக்குக் கைகொடுப்போம்।
உரிமைக்குக் குரல் கொடுப்போம்"
என்று ஓங்கி ஒலித்தவர்.
தலைமைப்பண்பு அவரிடம் தானாக வந்தது.
பாடசாலையில், சட்டக்கல்லூரியில்,
வழக்கறிஞர் கழகத்தில், முஸ்லிம் சமூகத்தில் —
இப்படியாக எங்கும் எதிலும்
தலைமை தானாக வந்து தூங்கிக்கொண்டது.
அவரும்,
தொட்ட அனைத்திலும் துலங்கினார்!
அமைச்சர் பதவியிலும் அப்படித்தான்.
இனங்களுக்கிடையே புரிந்துணர்வு அவசியம் என்பதை
எடுத்துக் காட்டி இயங்கி வந்தவர்.
தந்தை செல்வாவின் இன உறவுக் கொள்கையைத்
தானும் ஏற்று விழாவும் எடுத்தவர்.
சகோதர இனங்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு
உதவி செய்யும் உத்தம அரசியல்வாதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் வானில் அழகிய முழு நிலா...

கவிதை ஆக்கம் :
கவிச்சுடர் அன்புமுகையதீன்

பதிப்பாசிரியர்கள் :
சகோ. கட்டடக் கலைஒளி எம். ஐ. எம். இஸ்மாயில்
சகோ. ஏ. பீர்முகம்மது
சகோ. ஐ. எல். ஏ. மஜீது
சகோ. எம். ஐ. எம். முஸ்தபா

வெளியீடு :
ஸஹ்ரா வெளியீட்டுப் பணிக்குழு
கல்முனை — சிறி லங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title : Arasiyal Vaanil Azhahiya Muzhu Nila

First Edition : 1997 - August

Copy Right : Publishers

Printers : STAR Offset - Sainthamaruthu

Pages : 11 + III

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்திற்கு
இன்று தேவைப்படுவது இவர்போன்ற தலைவரே.
"நேற்றைய அரசியல் இன்றைய சரித்திரம்।
இன்றைய அரசியல் நாளைய சரித்திரம்।"
என்பதை மனதில் கொண்டோம்.
அழகிய முழுநிலா அச்சுருப் பெற்றது.

* * *

கால் நூற்றாண்டு காலங்களுக்கு மேலாக
கவிதைகள் எழுதிப் பிரபலம் பெற்றவர்
கவிச்சுடர் அன்புமுகைதீன் அவர்கள்.
"அன்பு" என்று அனைவராலும் அழைக்கப்பெறுபவர்.
கவிஞராக இருந்து கவிச்சுடராகி
மரபுக்கவிதைக்கு மணம் சேர்த்தவர்.
சிறு வயதில் இருந்தே காக்கா – தம்பி பாசஉணர்வோடு
சகோதரர் அஷ்ரஃப் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்
அவர் எழுதிய கவிதைகளே இங்கு பிரசுரமாயின.

* * *

"அரசியல் வானில் அழகிய முழுநிலா" என்ற இந்நூல்
காலத்தின் வரலாற்றுத் தேவைக்காகவெளியிடப்படுகின்றது.
Zahra Publication Committee
இதனை வெளியிடுகின்றது.
தொடர்ந்தும் இது போன்ற நூல்களை நாம்
வெளியிடுவோம்.
உங்கள் ஆதரவை எதிர்பாக்கின்றோம்.
நன்றி.

**ஏ. பீர்முகம்மது**
வெளியீட்டுக்குழு சார்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தாக கிடைத்த சொத்து

முத்தாக எங்களுக்கு கிடைத்த செல்வம்
மூடிய இருள்கிழிக்க வந்த திங்கள்
வித்தகனாய் அரசியலில் விளங்கும் வேந்தன்
விடுதலைக்காய் குரல் கொடுக்க வந்த சிங்கம்
நித்திரையில் ஆழ்ந்திருந்த எம்மைத் தட்டி
நிமிர்ந்துநடை போடவைத்த புரட்சிக் கீதம்
சித்திரமாய் நெஞ்சுகளை வென்று ஆளும்
செம்மலெங்கள் அஷ்ரஃப் நிலைத்து வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் தலைவன்

எங்களின் தலைவராய் எம். எச். எம். அஷ்ர∴பை
ஏற்றுநாம் கொண்ட தன் பின்பு
திங்களாய் இன்று திகழ்கிறார் அவரின்
திறமையில் நம்பிக்கை வைப்போம்.

உரிமையைக் காக்க உயிரையே கொடுக்கும்
ஒருவனை தலைவனாய் பெற்றோம்
அறிவுள்ள மக்கள் அஷ்ர∴ப் அணியில்
அவசியம் இணைந்திட வேண்டும!

நீண்டநாள் எம்மை மூடிய இருளை
நீக்கவே வந்த எம் நிலவு
ஆண்ட எம் இனத்தை மீண்டும் இந்நாட்டில்
அரியணை ஏற்றியே வைப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியத் தலைவன்

எங்கள் உணர்வுகளை ஏக்கங்களை பிரச்சினையை
மன்றத்தில் உரைக்கவொரு மகன் பிறக்க மாட்டானென
நீண்ட நாள் நாங்கள்
நினைத்துத் தவமிருந்தோம்.
ஆண்டவன் உன்னைத்தான் அதற்கென வைத்திருந்தான்.

நேற்றுத்தான் போனாய் அதற்குள் நிகழ்ந்தவைகள்
கொஞ்சமல்ல
போற்றத்தகுந்தபல புதுமைகளைச் செய்துள்ளாய்.
ஆற்றல் உடையவரை அசைத்துவிட முடியாது.
போற்ற மறுப்பவர்க்கு புத்தியிலே கோளாறு.

நாளைவரும் தலைமுறைக்கு
நாயகனே! உன்னையொரு
காவியத் தலைவனாய்
காட்டுதற்கு நாம் முயல்வோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கமே! இலங்கை நாட்டின் சிந்தனைச் செல்வமே வா!

எங்கள் தலைவனே! வா
இதயமே! தென்றலே வா!
கங்குலைக் கிழித்துத் தோன்றும்
கலைமதி முகத்தினோய் வா!
சிங்கமே! இலங்கை நாட்டின்
சிந்தனைச் செல்வமே வா!
தங்கமே! எங்கள் அன்புத்
தளபதி அஷ்ர.்.பே வா!

நீண்ட நாள் நாங்கள் பட்ட
நெஞ்சத் துயரை யெல்லாம்
ஆண்டவன் உதவி யாலே
அகிலமே கேட்க வைத்தாய்
கூண்டிலே பூட்டி னாலும்
கொள்கையில் நிலையாய் நின்று
வேண்டிய போதி லெல்லாம்
விடிவுக்காய் குரல் கொடுத்தாய்.

ஆற்றலைக் கண்டு நல்ல
அரசியல் ஞானி யெல்லாம்
போற்றினார் தலைவா! உன்னை
பொறாமையில் சிலபேர் இன்று
தூற்றிய போதும் நெஞ்சத்
துணிவுடன் உரிமை காக்க
காற்றென எழுந்தாய் உன்னைக்
கண்டுநாம் மகிழ்ந்தோம் வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்பது ஆண்டாய் இந்த
நாட்டிலே எம்மை ஆண்டோர்
பூட்டியே வைத்தே என்றும்
பொம்மையாய் ஆட்டி வைத்தார்.
காட்டினாய் புதிய பாதை
கடலலை யெனத் திரண்டோம்!
நாட்டிலே எம்மைப் பற்றி
நகைத்தவாய் மூட வைத்தாய்.

மக்களின் உரிமை காக்க
மன்றத்தில் குரல் கொடுத்தாய்
பக்கத்தில் இருந்த பாவி
பழித்துன்னை எதிர்த்த போதும்
தக்கதோர் பதில் கொடுத்து
தலையவர் குனிய வைத்தாய்
மக்களின் சொத்தாய் இன்று
மதிப்பு நீ பெற்றாய் வாழ்க!

எத்தனை தலைவர் முஸ்லிம்
இனத்துக்குள் தோன்றி னாலும்
சத்தியம் உன்னைப் போல
சமூகத்தை வென்றோர் இல்லை!
முத்தென தலைவா! உன்னை
முழுநாடும் மதிக்கு தன்றோ!
நித்தமும் நிலைத்து வாழ
நெஞ்சார வாழ்த்து கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்களில் வாழும் மக்கள் தலைவன்

வருக! வருக! வருக! வருகவே! - எங்கள்
வாஞ்சையுள்ள தலைவர் அஷ்ரஃப் என்றும்
வாழ்க! வாழ்க! வாழ்கவே!

பெருமை தேடித்தந்த - எங்கள்
தலைவர் வருகவே!
பேரறிஞர் போற்றும் எங்கள்
தலைவர் வருகவே!

அரசியலில் ஏழையாக இருந்த எங்களை
ஆட்சியிலே ஏற்றிவைத்த தலைவர் வருகவே!
உரிமைக்காக குரல்கொடுக்கும் தலைவர் வருகவே!
உயிராய் நாங்கள் மதிக்கும் எங்கள் தலைவர் வாழ்கவே!

முஸ்லிம் மக்கள் படும்துயரை எடுத்துக்காட்டினார்
மூடியிருந்த காரிருளை விரட்டி ஓட்டினார்
இஸ்லாம் எங்கும் ஓங்குதற்கு வழியைக் காட்டினார்
எமக்கெல்லாம் அரசியலில் ஒளியை ஊட்டினார்.

அஞ்சிக் கெஞ்சி வாழும் நிலையை அறவே மாற்றினார்
அடிமை விலங்கை உடைத்தெறியும் உணர்வைப் பாய்ச்சினார்.
பஞ்சத்தில் வாடுவோரின் பசியைப் போக்கவும்
பாசமாக இலங்கை மக்கள் சமமாய் வாழவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனரமைப்பு அமைச்சராக புதுமை செய்கிறார்
பொருள் இழந்த மக்களுக்கு உதவி செய்கிறார்.
இனவேறுபாடு நீங்க இன்று உழைக்கிறார்
எமக்குள்ளே ஒற்றுமையைக் காணத் துடிக்கிறார்.

மந்திரியாய் ஆனபோதும் மக்கள் தலைவராய்
மனங்களிலே அஷ்ர.்.ப் என்றும் வாழப்போகிறார்
சிந்தித்து சமூகம் என்ற கப்பல் தன்னையே இந்த
செம்மல் செலுத்தி வெற்றிமேலும் காணப் போகிறார்.

1994ஆம் ஆண்டு கல்முனை ஸாஹிறா பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட தலைவரை வரவேற்றுப் பாடிய பாடல் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களின் எம். பி யாக
இதுவரை இருந்தோ ரெல்லாம்
தங்களை உயர்த்து தற்கே
தாளங்கள் போட்டு நின்றார்
எங்களைப் பற்றிச் சற்றும்
எண்ணாமல் அவர் பறந்தார்
பொங்கிய வெள்ளம் போல
புறப்பட்டு வந்து காத்தாய்.

காசிக்கு ஆள் பிடித்து
கழுத்திலே மாலை போட்டு
ஆசையை தீர்த்துக் கொள்ள
அலைபவர் நிறைய வுண்டு
பாசத்தில் இன்று நாங்கள்
படையெனத் திரண்டு அன்பு
வாசத்தைக் கோர்த்து மாலை
வழங்கினோம் வாழ்க! வாழ்க!

நாட்டிலே இன்று வாழும்
நரிசில உன்னை வார்த்தை
ஈட்டியைக் கொண்டு உன்றன்
இதயத்தை துளைத்த போதும்
வீட்டுக்குள் ஒதுங் கிடாது
வீரனாய் கரங்கள் நீட்டி
நாட்டுக்காய் உழைக்க வந்த
நாயகா வருக! வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்களின் வாக்கைப் பெற்று
மாடியில் வாழ்ந்தோ ரல்லாம்
மக்களை மறந்த தால்தான்
மடுவுக்குள் அவர்கள் வீழ்ந்தார்.
இக்கதை உனது வாழ்வில்
ஏற்பட்டால் தாங்க மாட்டோம்!
மக்களை அணைத்து என்றும்
மகிழ்ச்சியில் திளைத்து வாழ்க!

மந்திரிப் பதவி கண்டு
மயங்கிநீ ஆட மாட்டாய்
தந்திரமாக எங்கள்
தனித்துவம் காத்து நிற்பாய்
நொந்தவர் அவலம் நீங்க
நுழைந்துநீ உழைப்பாய் முஸ்லிம்
சந்ததி கரங்கள் ஓங்க
சரித்திரம் படைப்பாய் வாழ்க!

எமது அன்புத் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்கள் துறைமுகங்கள், கப்பல்துறை, புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சராக பதவியேற்று அவர் பிறந்த மண்ணுக்கு வந்த மகிழ்ச்சியில் பிறந்த கவிதை இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சின்ன வயதிலிருந்தே அஷ்ரஃப்
செம்மலை நான் காதலித்தேன்
அன்னவரின் ஆற்றலிலே
அகத்தை பறிகொடுத்தேன்

இறைவன் பேரருளால் – எங்கள்
இலங்கை மணி நாட்டுக்கு
சொத்தாகக் கிடைத்த பெரும்
சோதரனை நேசித்தேன்

வல்லமையால் – புதிய
வரலாறு படைத்துள்ளார்
சொல்லாலே – அறிஞர்களை
சொக்கவைத்து ஆளுகிறார் அஷ்ரஃப்

மன்னவனைப் பற்றியென்
மனதிலே இடையிடையே
உன்னிவந்த கவிதைகளை
உடனடியாய் பொறித்துவைத்தேன்

நண்பர்கள் இன்றதனை
நயக்கத் தருகின்றார்
நாளைவரும் தலைமுறைக்கு
நாயகனை நாங்களொரு

காவியத் தலைவனாய்
காட்டுவது நம் கடமை

– கவிச்சுடர் அன்பு முகையதீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org